## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6
## பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு – மார்ச்/ஏப்ரல் 2016
## சமூக அறிவியல் – விடைக்குறிப்பு

| | |
|---|---|
| | பிரிவு – I |
| | பகுதி – I |
| | அனைத்து வினாக்களுக்கும் விடையளி |
| | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 14 X 1 = 14 |
| 1 (அ) | தொழிற்புரட்சி |
| 2 (இ) | லூசிட்டானியா |
| 3 (அ) | அமெரிக்கா |
| 4 (ஈ) | திருவருட்பா |
| 5 (இ) | பஞ்சசீலம் |
| 6 (ஈ) | புதுடெல்லி |
| 7 (அ) | மார்ச் 15 |
| 8 (இ) | கங்கோத்ரி |
| 9 (ஈ) | சணல் |
| 10 (இ) | மும்பை |
| 11 (ஆ) | சாலை வழி |
| 12 (ஆ) | 950 டாலர்கள் |
| 13 (ஆ) | 1950 |
| 14 (இ) | ஆச்சார்ய வினோபாபாவே |
| | பகுதி – II |
| | இரு வினாக்களுக்கும் விடையளி |

| 15 | பொருத்துக | 2 X 5 = 10 |
|---|---|---|
| (i) அ | டியுஸ் | முசோலினி |
| ஆ | ரத்து செய்யும் உரிமை | எதிர்வாக்கு |
| இ | இராணி லட்சுமிபாய் | மத்திய இந்தியா |
| ஈ | சௌரி சௌரா | உத்திரபிரதேசம் |
| உ | வீரத் தமிழன்னை | டாக்டர் எஸ் தருமாம்பாள் |

| | | |
|---|---|---|
| ii) அ | லாவா பீடபூமி | தக்காணம் |
| ஆ | கோதுமை | பஞ்சாப் |
| இ | மென் பொருள் தொழிலகம் | பெங்களூரு |
| ஈ | வடக்கு இரயில்வே | புது டெல்லி |
| உ | உணர்வி | மின் காந்த ஒளிக்கற்றைகள் |

| பிரிவு – II | | 10 X 2 = 20 |
|---|---|---|
| | பகுதி – I (ஏதேனும் நான்கு மட்டும்) | |
| 16 | காலனி ஆதிக்கம்<br>குடியேற்றங்களை அந்நிய நாட்டில் ஏற்படுத்தி அதன் இயற்கை வளங்களைச் சுரண்டுதல் ஆகும்<br>(அல்லது)<br>உள்நாட்டு பெரும்பான்மையினருக்கும் அன்னிய சிறுபான்மையினருக்கும் இடையில் ஏற்பட்ட நெருடலான உறவு ஆகும். | 2 |
| 17 | பொருளாதார பெருமந்தம் தோன்ற காரணங்கள்<br>• அமெரிக்கப் பங்குச் சந்தையில் ஏற்பட்ட சரிவு<br>• பங்குகளின் விலை உயரும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் மக்கள் கடன் வாங்கி பங்கு சந்தையில் முதலீடு செய்தது – இப்பெருமந்தத்தின் காரணமாகும் | 2 |
| 18 | பாசிசத்தின் நான்கு தூண்கள்<br>• ஒரே தலைமை<br>• சர்வாதிகாரியின் கீழ் ஒரே கட்சி ஆட்சி<br>• பயங்கரவாதம்<br>• பொருளாதார ஆளுமை | 2 |
| 19 | அமெரிக்கா ஜப்பான் மீது போர் தொடுக்கக் காரணம்<br>1941 ஆம் ஆண்டு டிசம்பர் 7ந் தேதி முத்து துறைமுகத்தில் இருந்த அமெரிக்க கடற்படைத் தளத்தை ஜப்பான் தாக்கியது.<br>இதனைத் தொடர்ந்து அமெரிக்கா ஜப்பான்மீது போர் அறிவிப்பு செய்தது. | 2 |
| 20 | ஐநா வின் சிறப்பு நிறுவனங்கள் (ஏதேனும் நான்கு)<br>1. உலக சுகாதார நிறுவனம் (WHO)<br>2. ஐநா கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு (UNESCO)<br>3. ஐநா குழந்தைகள் அவசர கால நிதி நிறுவனம் (UNICEF)<br>4. பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் (ILO)<br>5. உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் (FAO)<br>6. உலக வங்கி (IBRD) | 2 |
| 21 | 1857 ம் ஆண்டு நடந்த புரட்சியின் உடனடிக் காரணம்<br>• இந்திய இராணுவத்தில் ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய என்பீல்டு ரக துப்பாக்கி.<br>• தோட்டாக்களின் மேலுறைகளில் தடவப்பட்டிருந்த பசையானது பசுவின் கொழுப்பு என்றும் பன்றியின் கொழுப்பு என்றும் வதந்தி கிளப்பப்பட்டது.<br>• இந்துக்களும் முஸ்லீம்களும் இத்தோட்டாக்களைப் பயன்படுத்துவது தங்களது சமயக் கோட்பாட்டிற்கு எதிரானது என்று கருதினர். இதுவே புரட்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்தது. | 2 |
| 22 | பெரியார் "வைக்கம் வீரர்"<br>• 1924 ஆம் ஆண்டு கேரளாவில் உள்ள வைக்கத்தில் நடைபெற்ற சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கேற்று தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலய நுழைவுத் தடைச் சட்டத்தை எதிர்த்துப் போராடினார்.<br>• இறுதியில் திருவிதாங்கூர் அரசு ஆலய நுழைவு தடைச் சட்டத்தைத் தளர்த்தி, அனைவரும் ஆலயத்திற்குள் நுழையலாம் என அறிவித்தது.<br>• இதன் காரணமாக பெரியாருக்கு "வைக்கம் வீரர்" என்ற பட்டம் வழங்கப்பட்டது. | 2 |

| | | |
|---|---|---|
| 23 | ஜாலியன் வாலாபாக் படுகொலை<br>• 1919 ல் முக்கிய தலைவர்களான டாக்டர்.சத்யபால் மற்றும் டாக்டர்.சாய்புதின்கிச்லு கைது செய்ததை எதிர்த்து சுமார் பத்தாயிரம் மக்கள் அமிர்தரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக் பூங்காவில் கூடினர்.<br>• இராணுவ தளபதியான ஜெனரல் டயர் தம் படை வீரர்களுடன் அங்கு சென்று எந்த முன்னறிவிப்புமின்றி துப்பாக்கிச் சூடு நடத்தினர்.<br>• நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் படுகாயமுற்றனர். | 2 |
| | பகுதி – II (ஏதேனும் ஒன்று) | |
| 24 | ஜனநாயகம்<br>ஜனநாயகம் என்பது "மக்களால் மக்களுக்காக, மக்களே ஆட்சி" செய்வது ஆகும். | 2 |
| 25 | இன ஒதுக்கல் கொள்கை<br>இன ஒதுக்கல் கொள்கை என்பது ஆப்பிரிக்காவில் பின்பற்றப்பட்ட இன வேறுபாட்டுக் கொள்கையாகும்.<br>தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர்கள் ஆப்பிரிக்க குடிமக்களுக்கு சம உரிமை வழங்க மறுத்தனர். நெல்சன் மண்டேலாவின் தொடர் போராட்டம் காரணமாக 1990ஆம் ஆண்டு இன ஒதுக்கல் கொள்கை முடிவுக்கு வந்தது | 2 |
| | பகுதி – III (ஏதேனும் நான்கு) | |
| 26 | இந்தியாவின் முக்கிய இயற்கைப் பிரிவுகள்<br>1. வடக்கு மலைகள்<br>2. வட இந்திய பெரும் சமவெளிகள்<br>3. தீபகற்ப பீடபூமி<br>4. கடற்கரை சமவெளிகள்<br>5. தீவுகள் | 2 |
| 27 | தென் மேற்குப் பருவக்காற்று<br>வட கிழக்குப் பருவக்காற்று என இருவகைகளாகப் பிரிக்கலாம் | 2 |
| 28 | இந்தியாவில் மைக்கா உற்பத்தியாகும் இடங்கள்<br>ஆந்திரா, ஜார்கண்ட், பீகார், இராஜஸ்தான் | 2 |
| 29 | பருத்தி விளையும் இடங்கள் (ஏதேனும் நான்கு)<br>1. குஜராத் 2. மகாராஷ்டிரம் 3. ஆந்திரா 4. கர்நாடகா 5. தமிழ்நாடு<br>6. மத்தியபிரதேசம் 7. பஞ்சாப் 8. ஹரியானா | 2 |
| 30 | தொழில் அமைவிடத்தை நிர்ணியிக்கும் காரணிகள்<br>1. மூலப் பொருட்கள் 2. எரிசக்தி 3. போக்குவரத்து 4. மனித சக்தி<br>2. நீர் வளம் 6. சந்தை 7. அரசாங்க கொள்கைகள் | 2 |
| 31 | கந்தக – டை – ஆக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடு,<br>கார்பன் மோனாக்ஸைடு, அங்கக வேதியியல் பொருட்கள் | 2 |
| 32 | வணிகம்<br>வணிகம் என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குவதும், விற்பதும் அல்லது பண்ட மாற்றம் செய்யும் செயலே ஆகும்<br>வணிகத்தின் வகைகள்<br>1. உள்நாட்டு வணிகம் 2. பன்னாட்டு வணிகம் | 2 |
| 33 | புவித் தகவல் தொகுதிகள் கணினி மென் கட்டளைத் தொகுப்பு, மற்றும் பரப்புசார் புள்ளி விவரங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட தொகுதியாகும். | 2 |

| | பகுதி – IV (ஏதேனும் ஒன்று) | | |
|---|---|---|---|
| 34 | நாட்டு வருமானத்தை அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் வகுக்க கிடைக்கும் ஈவு தலா வருமானம் என்றழைக்கப்படுகிறது.<br>தலா வருமானம் = மொத்த நாட்டு வருமானம் (உற்பத்தி) / நாட்டு மக்கள் தொகை | | 2 |
| 35 | குடிசைத் தொழில் என்பது குடும்ப உறுப்பினர்களால் உள்ளூர் அங்காடியில் விற்பனை செய்வதற்காக பழமையான உற்பத்தி முறைகளால் நடத்தப்படும் தொழில் அமைப்பாகும். எ.கா. கைத்தறி மற்றும் கயிறு திரித்தல் | | 2 |
| | பிரிவு – III (ஏதேனும் நான்கு) | 4 X 2 = 8 | |
| | (ஏதேனும் இரண்டு விடைக்குறிப்புகள்) | | |
| 36 | மேற்கு தொடர்ச்சி மலைகள் | கிழக்கு தொடர்ச்சி மலைகள் | |
| | 1. தொடர்ச்சியான மலைத்தொடர்.<br>2. தபதி நதியிலிருந்து கன்னியாகுமரி வரை பரவியுள்ளது.<br>3. இது மேற்கு கடற்கரைக்கு இணையாக உள்ளது.<br>4. இங்கு உயரமான சிகரம் ஆனைமுடி.<br>5. உற்பத்தியாகும் ஆறுகள் அரபிக் கடலில் கலக்கின்றன | 1. தொடர்ச்சியற்ற மலைத்தொடர்.<br>2. மகாநதி ஆற்றில் இருந்து வைகை ஆறுவரை பரவியுள்ளது.<br>3. இது கிழக்கு கடற்கரைக்கு இணையாக உள்ளது.<br>4. இங்கு உயரமான சிகரம் மகேந்திரகிரி.<br>5. உற்பத்தியாகும் ஆறுகள் வங்கக் கடலில் கலக்கின்றன | 2 |
| 37 | அதிக மழை பெறும் பகுதி | குறைவான மழை பெறும் பகுதி | |
| | 1. 200 செமீ முதல் 300 செமீ மழை பெறும் பகுதிகள்<br>2. மத்திய கங்கைச் சமவெளி, மேற்கு மலைத் தொடர், கிழக்கு மகாராஷ்டிரம், மத்தியபிரதேசம் மற்றும் ஒரிசா | 1. 50 செமீ குறைவாக மழை பெறும் பகுதிகள்<br>2. காஷ்மீரின் வடபகுதி, மேற்கு ராஜஸ்தான், தென் பஞ்சாப் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகள் மலை மறைவு பகுதியிலுள்ள தக்காண பீடபூமி பகுதிகள் | 2 |
| 38 | உலோக கனிமங்கள் | உலோகமல்லாத கனிமங்கள் | |
| | 1. கனிமங்கள் உலோகத்தன்மை உடையன<br>2. இரும்பு செம்பு, மாங்கனீசு. பாக்சைட் மற்றும் தங்கம் | 1. கனிமங்கள் உலோகத்தன்மை அற்றவை<br>2. மைக்கா, சுண்ணாம்புக்கல், ஜிப்சம், பொட்டாசியம், நிலக்கரி, பெட்ரோலியம் | 2 |
| 39 | ஒரு பயிர் சாகுபடி | இரு பயிர் சாகுபடி | |
| | ஒரு பயிர் ஒரே பருவத்தில் ஒரு இடத்தில் சாகுபடி செய்யும் முறைக்கு ஒரு பயிர் சாகுபடி என்று பெயர்<br>எ.கா. நெல், கரும்பு, தேயிலை | இரு பயிர்கள் ஒரே பருவத்தில் ஒரே இடத்தில் சாகுபடி செய்யும் முறைக்கு இரு பயிர் சாகுபடி என்று பெயர்<br>எ.கா. கோதுமை மற்றும் கடுகு | 2 |
| 40 | வேளாண் சார்ந்த தொழிலகங்கள் | கனிமம் சார்ந்த தொழிலகங்கள் | |
| | 1. விவசாயப் பொருட்களை மூலப் பொருட்களாக கொண்டு செயல்படும் தொழிற்சாலைகள் ஆகும்<br>2. கரும்பு, பருத்தி, சணல் ஆலைகள் | 1. கனிமப் பொருட்களை மூலப் பொருட்களாக கொண்டு செயல்படும் தொழிற்சாலைகள் ஆகும்<br>2. இரும்பு எஃகு, சிமெண்ட் ஆலைகள் | 2 |

| | | | |
|---|---|---|---|
| 41 | நீர் மாசடைதல் | நிலம் மாசடைதல் | |
| | 1. வேதியியல் இயற்பியல் அல்லது உயிரியல் மாற்றம் நன்னீரின் தரத்தில் ஏற்படுவதாகும். அதைப் பயன்படுத்தும் (அ) அதில் வாழும் உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்கும்<br>2. எண்ணெய், பிளாஸ்டிக் பூச்சிக் கொல்லி போன்றவைகளால் மாசடையும் நீர் மனிதன் மற்றும் நீர் வாழ் விலங்கினங்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியதாகும் | 1. நகர கழிவுகள் ஓரிடத்தில் கொட்டப்படுவதால் சாக்கடை அடைபட்டு உடைபட்டு இருப்பதாலும் பூச்சிக் கொல்லி பயன்படுத்துவதாலும் நிலம் மாசு அடைகிறது.<br>2. எரிபொருள் கொட்டப்படுவதாலும், தொழிலக கழிவுகள் நேரடியாக மண்ணில் கலப்பதாலும் நிலம் மாசடைகிறது. | 2 |
| 42 | ஏற்றுமதி | இறக்குமதி | |
| | 1. நம் நாட்டின் உபரி பொருட்களையும் சேவைகளையும் அந்நிய செலவாணிக்காக வெளிநாட்டிற்கு விற்பதாகும்<br>2. இந்தியா ஏறத்தாழ 7500 விதமான பொருட்களை உலகின் சுமார் 190 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.<br>3. விவசாய பொருட்கள் கனிமங்கள் இரசாயன பொருட்கள் இயந்திர பொருட்கள் ஆடை ஆபரணங்கள் | 1. நமக்கு தேவையான பொருட்களையும் சேவைகளையும் வெளிநாட்டிலிருந்து வாங்குவதாகும்<br>2. சுமார் 6000 விதமான பொருட்களை 140 நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது.<br>3.போக்குவரத்து சாதனங்கள் இயந்திரங்கள், மின்னியல் இயந்திரங்கள் மருந்துகள் பெட்ரோலியம் உரங்கள் செய்தித் தாள்கள் | 2 |
| 43 | வான்வழி | நீர் வழி | |
| | 1. நவீன, விலையுயர்ந்த மற்றும் வேகமான போக்குவரத்து<br>2. இரண்டு வகை – உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வான்வழி போக்குவரத்து | 1. விலை மலிவான போக்குவரத்து<br>2. இரண்டு வகை – உள்நாட்டு நீர்வழி மற்றும் கடல்வழி போக்குவரத்து | 2 |

**பிரிவு – IV (ஏதேனும் இரண்டு) 2 X 4 = 8**

| | |
|---|---|
| 44 | ஜெர்மனியின் பேராசை<br>அ. கெய்சர் இரண்டாம் வில்லியம்<br>ஆ. உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தும் உரிமை மற்றும் திறமை ஜெர்மனிக்கு மட்டுமே உள்ளது என்று கருதினர்<br>இ. ஆங்கிலேயர்களின் பேரரசில் சூரியன் மறைவதேயில்லை என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை<br>ஈ. ஹெலிகோலாந்து |
| 45 | பிராங்களின் டி ரூஸ்வெல்ட்<br>அ. 1932<br>ஆ எப்.டி.ஆர் (FDR) என அழைக்கப்பட்டார்<br>இ. நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன் அமெரிக்க மக்களுக்கு புதிய பயனுரிமைக் கொள்கையை அர்பணிக்க நான் உங்களுக்குஉறுதியளிக்கிறேன்<br>ஈ. புதிய பயனுரிமைக் கொள்கை |
| 46 | ஆரிய சமாஜம்<br>அ. மூல் சங்கர்<br>ஆ சுவாமி விராஜனந்தர்<br>இ. வேதங்களை நோக்கிச் செல்<br>ஈ. பெண் கல்வி, கலப்பு மணம், சமபந்தி உணவுமுறை, பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் |

| | |
|---|---|
| 47 | கே காமராசர்<br>அ. 1924 ம் ஆண்டு வைக்கம் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டதின் மூலம்<br>ஆ அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டடார்<br>இ. தீரர் சத்திய மூர்த்தியின் வீட்டில் இந்திய தேசியக் கொடியை ஏற்றினார்<br>ஈ. அக்டோபர் 2, 1975 ஆம் ஆண்டு |

| | |
|---|---|
| பிரிவு – V<br>பகுதி – I | |
| ஒவ்வொரு வினா எண்ணிலும் உள்ள மூன்று வினாக்களில் ஒன்றினைத் தேர்வு செய்து நான்கு வினாக்களுக்கு விடையளிக்க 4 X 5 = 20 | |
| 48 | அ. ஏகாதிபத்தியத்திற்கான காரணங்கள்<br>1. தொழிற்புரட்சி<br>2. தேசியப் பாதுகாப்பு<br>3. தேசியமயமாக்கல்<br>4. வல்லமைச் சமநிலை ஆதிக்கம்<br>5. புதிய வழித்தடங்கள் கண்டுபிடிப்பு<br>6. மக்கள் தொகைப் பெருக்கம்<br>7. சட்ட ஒழுங்கின்மை<br>(ஏதேனும் 5 தலைப்புகளுக்கு விளக்கம்)<br>(அல்லது) |
| | ஆ. ஐ நா வின் முக்கிய சாதனைகள் (ஏதேனும் ஐந்து கருத்துகள்)<br>1. பல்வேறு பன்னாட்டு பிரச்சனைகள் அமைதியான பேச்சு வார்த்தை மூலம் உலக அமைதியை ஏற்படுத்துவது<br>2. இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் ஈரான் மற்றும் ஈராக் சிக்கல்கள் முடிவுக்கு கொண்டு வந்துள்ளது.<br>3. 1963 அணு சோதனை தடைச்சட்டம்<br>1996 தொடர் அணு சோதனை தடைச் சட்டம்<br>4. 1992 ரியோ டி.ஜெனிரோ சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டு மாநாடு<br>அறிக்கை – 21<br>5.பெண்கள் முன்னேற்றம் – பயிற்சி நிறுவனங்கள்<br>6. 1956 சூயஸ் கால்வாய் சிக்கல் முடிவுக்கு வந்தது<br>7. கொரியா – வியட்நாம் போர், மற்றும் இஸ்ரேல் பாலஸ்தீனத்திற்கிடையே பிரச்சனைகளை தீர்த்தது.<br>(அல்லது) |
| | இ. பாரதியார் ஒரு சுதந்திர போராட்ட வீரர்<br>1. 1907 ஆம் ஆண்டு சூரத்தில் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ளுதல் திலகர் மற்றும் அரவிந்த கோஷ்க்கு ஆதரவு<br>2. 1904 ஆம் ஆண்டு தமிழாசிரியர் பணி – சுதேசி மித்தரன் உதவி ஆசிரியர்<br>3. 1908 ஆம் ஆண்டு சென்னையில் பெரும் கூட்டத்தை கூட்டி சுயராஜ்ய நாளை கொண்டாடினார்.<br>4. வந்தே மாதரம், அச்சமில்லை அச்சமில்லை, எந்தையும் தாயும், ஜெயபாரதம் போன்ற பாடல்களை அச்சிட்டு தமிழக மக்களுக்கு இலவசமாக அளித்து சுதந்திர வேட்கையை ஊட்டினார்.<br>5. தமிழ் வார பத்திரிக்கை இந்தியா மற்றும் பாலபாரதம் என்ற ஆங்கிலப் பத்திரிக்கையை வெளியிட்டார்.<br>6. 1908ஆம் ஆண்டு வ.உ.சிக்கு எதிராக ஆங்கில அரசு தொடர்ந்த வழக்கில் வ.உ.சி.க்கு ஆதரவாக சாட்சி வழங்கினார். |

பகுதி – II (ஏதேனும் ஒன்று)

| | |
|---|---|
| 49 | அ. சார்க்<br>1. அமைதியை நிலைநாட்ட – இந்தியா முயற்சியின் விளைவு<br>2. முதல் கூட்டம் – டிசம்பர் 7, 1985 – வங்காளம் டாக்கா ஆஷான் – முதல் பொதுச் செயலாளர்<br>3. உறுப்பு நாடுகள் வங்காள தேசம், பூடான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை, ஆப்கானிஸ்தான்<br>4. நோக்கம் சார்க் உறுப்பு நாடுகளின் உறவை நிலைநாட்ட<br>போக்குவரத்து, கடித சேவை, சுற்றுலா, வானியல், சுகாதாரம், வேளாண்மை மற்றும் தகவல் தொடர்பு<br>(அல்லது) |
| | ஆ. ஜனநாயகத்தில் எதிர்கட்சியின் பங்கு<br>1. எதிர் கட்சிகளின் செயல்பாடு<br>2. எதிர்கட்சித் தலைவர் ஆளுங்கட்சி அமைச்சருக்கு சமமான அதிகாரம் உடையவர்<br>3. ஆளுங்கட்சியின் நிறை குறைகளை வெளிப்படுத்தல்<br>4. அரசாங்கத்தின் செலவினங்களை அறிந்து கொள்ளும் உரிமை<br>5. ஆளுங்கட்சியினர் அதிகாரங்களை தவறாக பயன்படுத்துவதற்கு தடையாக இருத்தல்<br>6. ஆளும் கட்சி தங்களது அதிகாரங்களை தவறான முறையில் பயன்படுத்தும்போது சட்டமன்றத்திற்கு வெளியே செய்த்தாள் மற்றும் ஊடகங்கள் மூலம் விமர்சித்தல்<br>(அல்லது) |
| | இ. நுகர்வோரின் உரிமைகள்<br>1. பொருள்களின் தரம், அளவு மற்றும் விலை ஆகியவற்றை தெரிந்து கொள்ளும் உரிமை<br>2. நுகர்வோரின் பொருட்கள் அவர்களது வாழ்க்கைக்கு அவர்களது சொத்திற்கும் பாதுகாப்பினை ஏற்படுத்தும் வேளையில் அவர்கள் அந்தப் பொருட்களைக் குறித்தும் தங்களது எதிர்ப்பினைத் தெரிவிக்கும் உரிமை<br>3. நுகர்வோரின் நலன்கள், சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் தீர்வு செய்யப்பட வேண்டும்<br>4. 2005 – அக்டோபர் 12 தகவல் அறியும் சட்டம்<br>5. பொது நிறுவனங்களின் நடவடிக்கைகளை அறிந்து கொள்ளும் அடிப்படை உரிமை |
| 50 | அ. காடுகளின் முக்கியத்துவம்<br>1. காடுகள் வீட்டுத் தேவைக்கும் வணிகத்திற்கும் தேவையான விலையுயர்ந்த மரங்களையும் மூலப் பொருட்களையும் அளிக்கின்றன.<br>2.அரக்கு, கோந்து, பிசின், தோல், பதனீட்டுப் பொருள்கள், மருந்துகள் மூலிகைகள்<br>3. அந்நிய செலவாணியை ஈட்டுகிறது<br>4. பால் பண்ணைப் பொருள்கள்<br>5. சுற்றுலா மையங்கள்<br>6. கார்பன் டை ஆக்ஸைடை உட்கொண்டு காற்று மாசுபடுதலைத் தடுக்கிறது.<br>7. மண்ணரிப்பினைத் தடுக்கிறது<br>8. நிலத்தடி நீர் அதிகரிக்கச் செய்கிறது<br>9. உயிரினங்களின் வாழிடமாகத் திகழ்கிறது<br>10 காலநிலையைச் சீராக்கி வெப்பம் ஈரப்பதத்தை அளிக்கிறது<br>11. நாட்டின் எரிசக்தியை 40 சதவீதம் காடுகள் பூர்த்தி செய்கின்றன<br>(ஏதேனும் ஐந்து மட்டும்)<br>(அல்லது) |


| | |
|---|---|
| | ஆ. மும்பையில் பருத்தி ஆலைகள் அமைய சாதகமான காரணிகள்<br>1. மகாராஷ்டிரத்திலுள்ள மும்பையில் பருத்தி ஆலை முன்னிலைவகிப்பதால் இந்தியாவின் மான்செஸ்டர் என மும்பை அழைக்கப்படுகிறது<br>2. பருத்தி விளையும் இடங்களுக்கும் தொழிற்சாலைக்கும் இடையே இரயில் சாலை போக்குவரத்து இணைப்பு வசதி<br>3. ஈரப்பதம் கொண்ட காலநிலை நிலவுகிறது<br>4. மூலதனப் பொருட்கள் மற்றும் நிதிவசதி எளிதாக கிடைக்கிறது.<br>5. பணியாட்கள் ஏராளமாக கிடைக்கின்றனர்.<br>6. (முடிவுற்ற பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு மும்பை துறைமுகம் ஏதுவாக உள்ளது.<br>(அல்லது) |
| | இ. தொலை நுண்ணுர்வு நுட்பம்<br>1. புவியின் விவரங்களை தொலைவில் இருந்து சேகரிப்பது ஆகும் (நேரடியாக தொடர்பு கொள்ளாமல்)<br>2. இவற்றின் மூலம் பாறைக் கோளம், நீர்க் கோளம், வளிக் கோளம் போன்றவை அளவிடப்படுகிறது.<br>3. இதில் உணர்விகள் என்ற கருவி பயன்படுகிறது<br>4. இக் கருவிகள் ஹெலிகாப்டர், விமானங்கள், செயற்கை கோளில் பொருத்தப்பட்டு தகவல் சேகரிக்கப்படுகிறது.<br>5. சூரிய ஒளியின் மின்காந்த அலைகளை பதிவு செய்வதன் மூலம் பெறப்படுகிறது.<br>6 மேப்பியலாளர்கள் வான்வெளி புகைப்படங்களை பயன்படுத்தி வரைபடங்கள் வரைந்தனர்<br>7. புவி வள நுட்ப செயற்கைக் கோள் (ERTS) விண்ணில் ஏவப்பட்டது.<br>(ஏதேனும் ஐந்து மட்டும்) |
| 51 | அ. நாட்டு வருமானம் அடிப்படை கருத்துக்கள்<br>1. மொத்த நாட்டு உற்பத்தி<br>2. மொத்த உள்நாட்டு உற்பத்தி<br>3. நிகர நாட்டு உற்பத்தி<br>4. நிகர உள்நாட்டு உற்பத்தி<br>5. தலா வருமானம்<br>(ஏதேனும் இரண்டு தலைப்புகளை விளக்கவும்)<br>(அல்லது) |
| | ஆ பொருளாதார சீர்திருத்தங்கள் 1991<br>1. முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று<br>2. நோக்கங்கள் – தனியார்மயமாதல், தாராளமயமாதல், உலகமயமாதல்<br>3. அதிவேக தொழில்மயமாக்கல்<br>4. அயல்நாட்டு முதலீடு<br>5. சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்கள் – சலுகைகள்<br>6. பன்னாட்டு நிறுவனங்கள் அனுமதி<br>(மேற்கூறிய தலைப்பிற்கு விளக்கம்)<br>(அல்லது) |

| |
|---|
| இ. பசுமை புரட்சி<br>1. பசுமை புரட்சி 1967 ஆம் ஆண்டு இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது<br>2. இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. நிலச்சீர்திருத்தம் – அதிக விளைச்சல் தரும் வீரியமுள்ள விதைகள்பயன்பாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட பாசனவசதிகள் அறிமுகம்<br>3. கோதுமை மற்றும் அரிசி போன்ற உணவுப் பயிர் உற்பத்தியில் தன்னிறைவு. இரசாயன உரங்கள் பூச்சிக் கொல்லி மருந்துகளின் தேவை அதிகரிப்பு<br>4. பசுமை புரட்சியின் விளைவாக இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்தது<br>5. அதிக விளைச்சல் தரும் விதைகளை பயன்படுத்துவதற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனமும் இந்திய வேளாண் பல்கலைக் கழகங்களான லூதியானா பந்து நகர், கோயம்புத்தூர் முக்கிய காரணம் ஆகும் |

| பிரிவு – VI | | |
|---|---|---|
| கீழ்க்கண்டவற்றுக்கு காலக்கோடு வரைக | | |
| 52 | 1920 முதல் 1940 வரையிலான எவையேனும் ஐந்து வரலாற்று நிகழ்வுகளை இந்திய வரலாறு காலக்கோட்டில் எழுதுக | 1 X 5 = 5 |
| | காலக்கோடு<br>1. 1920 – ஒத்துழையாமை இயக்கம், கிலாபத் இயக்கம்<br>2. 1922 – சௌரி சௌரா சம்பவம், ஒத்துழையாமை இயக்கம் கைவிடல்<br>3. 1923 – சுயராஜ்யக்கட்சி தொடக்கம்<br>4. 1927 – சைமன் குழு அமைத்தல்<br>5. 1928 – சைமன்குழு – வருகை<br>6. 1930 – தண்டியாத்திரை உப்புச் சத்தியாகிரகம் சட்ட மறுப்பு இயக்கம் முதல் வட்ட மேஜை மாநாடு<br>7. 1931 – இரண்டாம் வட்ட மேஜை மாநாடு, காந்தி–இர்வின் ஒப்பந்தம்<br>8. 1932 – மூன்றாம் வட்ட மேஜை மாநாடு, பூனா ஒப்பந்தம், வகுப்புவாத அறிக்கை<br>9. 1935 – இந்திய அரசியல் சட்டம்<br>10. 1939 – முதல் உலகப் போர் துவக்கம்<br>11. 1940 – ஆகஸ்ட் நன்கொடை, பாகிஸ்தான் கோரிக்கை | |

பிரிவு –VI

53. அ. ஆசிய வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றினை குறிக்கவும். (5மதிப்பெண்கள்)



(அல்லது)

ஆ. இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றினை குறிக்கவும்.

**INDIA - OUTLINE** Name :
Std :



54.இந்திய வரைபடத்தில் ஏதேனும் பத்து இடங்கள் (10 மதிப்பெண்கள்)

